

கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலியான சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம் சுக்காம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஆனந்த் என்பவர் உடலுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. ஆகியோர் நேரில் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அஞ்சலி செலுத்தினர். அப்போது அயோத்தியாப்பட்டணம் ஒன்றியச் செயலாளர்கள் ஏ. விஜயகுமார், க.ரத்தினவேல், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், சங்கர், கோபால், உள்ளிட்டோர் இருந்தனர்.



தருமபுரியில் 7 ஆம் ஆண்டு புத்தகத்திருவிழாவில் தி.மு.க. மேற்கு மாவட்ட மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் முனைவர். கவிதாமோகன்தாஸ் எழுதிய நூலினை முன்னாள் அமைச்சர் தருமபுரி தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் வெளியிட கவிஞர் மனுஷ்யபுத்திரன், கவிஞர்.அன்புதீபன் மற்றும் இயக்குநர்.கரு.பழனியப்பன் பெற்று கொண்டனர். விழாவில் முன்னாள்.எம்.பி.டாக்டர்.செந்தில், வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, வட்டாட்சியர்கள் மோகன்தாஸ், ராஜராஜன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தனி நிதிநிலை அறிக்கை – இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு என

# விவசாயிகள் நலனில் அக்கறையுள்ளவர் நம் முதல்வர்!

## திண்டிவனத்தில் வேளாண் இடு பொருட்களை வழங்கி – செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு!

திண்டிவனம், செப்.30-

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துறை சார்பில் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் மற்றும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் உயிர்ம வேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி திண்டிவனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன் தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் குமாரி ஆனந்திஅனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில்உயிர்மவேளாண்மை விழிப்புணர்வு கண்காட்சியினை திண்டிவனம் சார் ஆட்சியர் ஆகாஷ் தொடங்கி வைத்தார்.

கண்காட்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு ரக நெல் விதைகள், தோட்ட பயிர்கள், இயற்கை உணவுக்கு தேவையான நவதானிய வகைகள், உள்ளிட்ட விவசாயம் சார்ந்த டிராக்டர், பவர் டில்லர் உள்ளிட்ட பொருட்கள் விவசாயிகளுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

நிகழ்ச்சியில் சிறப்பு



விருந்தினராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு கண்காட்சியினை பார்வையிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற விவசாகள் பங்கேற்ற கருத்தரங்க விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றி விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்களை வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அவர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சியில் பல்வேறு நெல் ரகங்கள் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுபயிர் செய்யப்பட்டு மகசூல் அதிகப்படுத்தப்பட்டது. மேலும்விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கிய கலைஞர் விவசாயிகள் வாங்கிய கடனையும் தள்ளுபடி செய்தார்.

கலைஞர் ஆட்சியில் இன்று ஆட்சி செய்யும் தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகள் நலனில் அக்கறை கொண்டு வேளாண் துறைக்கு என தனி நிதிநிலை அறிக்கை உருவாக்கி இரண்டு லட்சம் விவசாயிகளுக்கு இலவசமின்இணைப்பை வழங்கி விவசாயிகள் நலனில் ஒரு அக்கறை உள்ள முதலமைச்சராக திகழ்ந்து வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட துணை சேர்மன் ஷீலா தேவி சேரன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மரக்காணம் துணைச் சேர்மன்பழனி, திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் சதீஷ், தோட்டக்கலை துணை இயக்குனர் அன்பழகன், விதை ஆய்வு துணை இயக்குனர் சரவணன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை துணை இயக்குனர் சுமதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பிரேமலதா, விதைச் சான்று மற்றும் உயிர் ம சான்று உதவி இயக்குனர் முனைவர் பாலசுப்பிரமணியம், செயலாளர் விழுப்புரம் விற்பனை குழு, வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு விஜயகுமார், வல்லம் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் மரக்காணம் வேளாண்மை உதவி இயக்குனர் ஆரோக்கியராஜ் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக தமிழ்நாடு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் முனைவர்கள் திருவரசன், துரைசாமி, லெனின் ஆகியோர் கலந்து கொண்டு இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து படகாட்சி மூலம்விளக்க உரை ஆற்றினர். வண்டிபாளையம் சீதாராமன் கலந்துகொண்டு விவசாய இயற்கை இடுபொருட்கள் தயாரிக்கும் முறை குறித்தும் விளக்கவுரை நிகழ்த்தினார்.

இதில் 400க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் உணவு உற்பத்தியாளர் நிறுவனங்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

வானூர்வேளாண்மை உதவி இயக்குனர் எத்திராஜ் நன்றி கூறினார்.

### கரூர் த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் சிக்கியவர்கள்

# நாமக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல்!

நாமக்கல், செப். 30–

கடந்த சனிக்கிழமை அன்று கரூர் மாவட்டத்தில் த.வெ.க. தலைவர் நடிகர் விஜயின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. பிரச்சாரத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் பெண்கள் உட்பட 41 பேர் பலியாகி உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் த வெ க தலைவர் நடிகர் விஜயின் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் கரூர் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ராசிபுரம் எல்ஐசி நகர் ஸ்ரீனிவாசன் என்பவருடைய மகள் பிரகதீஸ்வரி (வயது 22) மற்றும் நாமக்கல் 2வது வார்டு அன்பு நகரைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 60) ஆகியோரை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி மற்றும் மருத்துவர்கள் உடன் இருந்தனர்.



கரூர் மாவட்டத்தில் த.வெ.க. தலைவர் நடிகர் விஜயின் பிரச்சார கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் கரூர் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ராசிபுரம் எல்.ஐ.சி. நகர் ஸ்ரீனிவாசன் என்பவருடைய மகள் பிரகதீஸ்வரி (வயது 22) மற்றும் நாமக்கல் 2வது வார்டு அன்பு நகரைச் சேர்ந்த ஆறுமுகம் (வயது 60) ஆகியோரை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி மற்றும் மருத்துவர்கள் உடன் இருந்தனர்.

### கே.பி.சொக்கலிங்கம் எம்.சி. முன்னிலை! கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமை! திருவொற்றியூர் நகர

# முன்னாள் அவை தலைவர், மிசா கே.பரசுராமன் 33 ஆம் ஆண்டு நினைவு நாள்!


## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – கலாநிதி வீராசாமி எம்.பி., புகழஞ்சலி!

சென்னை, செப்.30-

கடலோர கிராமங்களில் கருப்பு சிவப்பு இரு வண்ண கொடியை உயர்த்தி பிடிப்பதையே லட்சியமாக கொண்டு வாழ்ந்து மறைந்த முன்னாள் திருவொற்றியூர் நகர கழக அவை தலைவர், மூன்று முறை நகராட்சி மன்ற உறுப்பினர், முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் மீசைக்காரர் என்று அழைக்கப்பட்ட மிசா கே.பரசுராமன் அவர்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (30.09.2025) காலை 10.00 மணியளவில் தியாகச்சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகே 5 வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் தலைமையில் நடைபெற்ற உள்ளது.

நினைவில் வாழும் கே.பரசுராமன் அவர்கள் அய்யா கலைஞர் அவர்களின் மீதும், கழகத்தின் மீதும் தீராத பற்று கொண்டவர். அய்யா கலைஞர் அவர்களின் முரட்டு பக்தனாகவே வாழ்ந்து வந்தார். மீனவ பகுதியில் கழகத்தை வளர்த்தவர்களில் முதன்மையானவர். கே.பரசுராமன் அவர்கள் கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என அனைத்திலும் கலந்து கொண்டவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்.

இவருக்கு கே.பி.பி. சாமி, கே.பி.சங்கர், கே.பி. இளங்கோ, கே.பி.சொக்கலிங்கம் என நான்கு மகன்கள் உள்ளனர். கே.பி.பி. சாமி அவர்கள் இரண்டு முறை திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், 2006 2011 ஆம் ஆண்டு வரையிலான மாண்புமிகு அய்யா கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் மீன்வளத்துறை அமைச்சராக இருந்தவர். கே.பி.சங்கர் அவர்கள் தற்பொழுது கழக மாநில மீனவரணி துணை தலைவராகவும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ளார். கே.பி. இளங்கோ தனியார் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர், கே.பி.சொக்கலிங்கம் ஒரு முறை திருவொற்றியூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், தற்பொழுது சென்னை



மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

இந்த புகழஞ்சலி நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தொகுதி பார்வையாளர் டி.நகர் மோகன், பகுதி கழக செயலாளர்கள் தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், வை.ம.அருள்தாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் அய்யா கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு தியாகச்சுடர் கே.பரசுராமன் அவர்கள் குடும்பத்தினர் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் சென்னை முகாம் அலுவலகத்தில், 27.09.2025 அன்று மொரிஷியஸ் நாட்டின் வெளியுறவுத் துறை துணை அமைச்சர் நரசிங்கன் ஹம்பிராஜனை மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். உடன் முன்னாள் எம்.பி. எம்.எம்.அப்துல்லா உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மடுவை அ.துரை
### செப்டம்பர் 30 (2020)



தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**